| O.S.No. 184/2024 | PW3: திரு. ரவி த/பெ. திரு. பூங்காவனம் | 17-03-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>1, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1. 4–ம் பிரதிவாதியின் மகன்தான் கோபாலகிருஷ்ணன். காலம்சென்ற கோபாலகிருஷ்ணனின் தந்தை மேகநாதனை எனக்கு நன்கு தெரியும். கோபாலகிருஷ்ணனுக்கு உடன்பிறந்தவர் ஒரே ஒரு தங்கை ஆவார். உள்ளூரில் இருக்கும் கோபாலகிருஷ்ணனின் தங்கை மைனாதேவி என்றால் சரிதான். வாதியின் தந்தை ஜெயகுமார். ஜெயகுமார் வீட்டில்தான் நான் 20 வருடமாக குடும்பம் இருந்து வருகிறேன். வாதியின் வீட்டிலிருந்து வரும் சந்திற்கு நேர் எதிரேதான் 4–ம் பிரதிவாதியும், 1–ம் பிரதிவாதியும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். காலம்சென்ற கோபாலகிருஷ்ணனுக்கு ஒரு அக்கா உள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. பாண்டினை கோபாலகிருஷ்ணனும், லலிதாவும் எழுதி எடுத்து வந்தார்கள் என்றால் இல்லை, ரஞ்சித் வீட்டில் குடும்பம் இருந்த ஒரு அம்மா எழுதினார். பாண்டு எழுதியவர் அதில் கையெழுத்து போட்டாரா என்றால் அது எனக்கு நினைவில்லை. ஆவணப்படி எனது பெயர் ரவிக்குமார். வா.சா.ஆ.2 பாண்டில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். வா.சா.ஆ.2–ல் எழுதியவர் என்று குறிப்பிட்டு கையெழுத்து எதுவும் போடப்படவில்லை என்றால் சரிதான். என் முன்னிலையில் ரூ.3 லட்சம் 500 ரூபாய் கட்டுகளாக 6 கட்டுகள் கொடுக்கப்பட்டது. அப்போது காலை நேரம் இருக்கும், நேரம் சரியாக நினைவில்லை.

3. வா.சா.ஆ.2 பாண்டானது ஏற்படும்போது நான் இல்லை என்றாலும், வாதியின் வீட்டில் குடியிருந்து வருவதால் வாதி கேட்டுக்கொண்டதற்காக கையெழுத்து போட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. திருமண நிகழ்ச்சிகளில் நான் வீடியோ எடுப்பதை கோபாலகிருஷ்ணன் டிவி மூலமாக டெலிகாஸ்ட் செய்வதற்காக டிவியை மாட்டுவார். சதாசிவத்திற்கு சொந்தமான டிவியினை கோபாலகிருஷ்ணன் வந்து மாட்டுவார். இன்று என்னை சாட்சியம் அளிக்க வாதிதான் அழைத்து வந்தார். பிரதிவாதிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால்தான் நான் பாண்டில் கையெழுத்து போட்டேன். வா.சா.ஆ.2 பாண்டில் பெயர் மற்றும் முகவரியை எழுதவில்லை என்றால் சரிதான், ஆனால் அந்த கையெழுத்து என்னுடையதுதான். வாதியின் வீட்டில் நான் குடும்பம் இருப்பதால் பாண்டில் பின்னிட்டு கையெழுத்து செய்துவிட்டு வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான், நான் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1. கோபாலகிருஷ்ணன் என்ன வியாபாரம் செய்து வந்தார் என்றால் பங்க் கடை வைத்து வந்தார். பாண்டில் கண்டுள்ள கடனானது கோபாலகிருஷ்ணனின் வியாபார செலவிற்காக வாங்கிய கடன் என்றால் இருக்கலாம். கோபாலகிருஷ்ணன் தனிப்பட்ட முறையில் வாங்கிய கடன் என்பதால் அவரது மனனான 2-ம் பிரதிவாதி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கோபாலகிருஷ்ணனுக்கு சொத்து இல்லை என்பதால் அவர் பெற்ற கடனை விகிதாச்சார அடிப்படையில் பிரதிவாதிகள் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் அவருக்கு சொத்து இருக்கிறதா இல்லையா என்று எனக்கு தெரியாது.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

ஒம்/- ரவி

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.17 11:27:05 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**